மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# சிலம்பில் முல்லைநிலத் தெய்வம்

**முனைவர் பெரி. அழகம்மை**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி

## முன்னுரை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். தொல்காப்பியர் முல்லைநிலத் தெய்வமாக மாயோனைக் குறிப்பிடுகின்றார். "மாயோன் மேய காடுறை உலகமும்"[1] என்ற தொடர் இதனை அறிவிக்கும். "மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு",[2] "மாயோன் அன்ன மாஅல்வரைக்கவான்"[3] என்ற சொல்லாட்சிகள் சங்க இலக்கியத்திலும் பயின்று வந்துள்ளன.

மாயோனை, 'நெடியோன்' (11:51), 'நெடுமால்' (11:41), 'மணிவண்ணன்' (10:10), 'கடல்வண்ணன்' (17.32), 'திருமால்' (17.35), 'கரியவன்' (17.36), 'நாராயணா' (17.37), 'மாயவன்' (17.19), 'விண்ணவன்' (17.36) எனும் சொற்களால் இளங்கோ ஆட்சிப்படுத்துவார். இவற்றில் கரியவன், கடல்வண்ணன், மணிவண்ணன், மாயவன் ஆகியன மாயோனின் நிறத்தினைக் குறிக்கும் சொற்கள். மாயோன் நிறத்திற்கு முகிலையும், காயா மலரையும் உவமைகளாகக் கூறும் மரபு உண்டு.

### தோற்றம்

திருமாலின் தோற்றத்தினைச் சிலப்பதிகாரம் விதந்தோதும். திருவரங்கத்தில் தென் திசையை நோக்கித் திருமால் கிடந்த கோலத்தில் காட்சி அளித்தலைச் சிலம்பு மொழிந்துள்ளது. திருவரங்கநாதனைத் 'திருஅமர் மார்பன்' (11:40) என்கிறார் இளங்கோ. மாமலை மீது மேகம் படிந்துள்ளது போன்று பாம்பணை மேல் திருமால் பள்ளிகொண்டுள்ளார் (11:35–40). நின்ற கோலத்தில் காட்சி தரும் திருமாலின் உடை மின்னல்; அணிகலன்கள் வானவில்; கரங்கள் தாமரை மலர்கள்; அக்கரங்களில் திகழும் சங்கு சக்கரங்கள் கதிர் மதியம் போன்று காட்சி தரும். இதனைப்,

பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு 11:47–49

எனச் சிலம்பு மொழியும். நெடியோனாகிய திருமாலின் மார்பில் தவழும் ஆரம்போன்று பேராறு காட்சி தருகிறது. திருமாலின் புகழை வெளிப்படுத்தும் நோக்குடன் மாங்காட்டு மறையோனை இளங்கோ படைத்துள்ளார்.

### புராணச் செய்திகள்

ஆய்ச்சியர்குரவை திருமாலின் பெருமையை இயம்பும் பகுதி. கடல் கடைந்தமை (26:37), உலகளந்தமை (11:148), இலக்குமணனோடு கானகம் சென்றமை (17.35), கண்ணனின் பிறப்பில் கம்சனை வென்றமை (17.37), குருந்தொசித்தமை (17.17), சோ அரணை அழித்தமை (6:54–55), அருச்சுனனுக்கு உதவக் கதிர் மறைத்தமை (17.26, 17.30), பஞ்சவருக்குத் தூது சென்றமை (17.34) ஆகிய புராணச் செய்திகள் சிலம்பில் இடம் பெற்றுள்ளன. திருமால் உலகளந்ததனை வாமன அவதாரமும், கடல் கடைந்தமையைக் கூர்ம அவதாரமும், கானகம் சென்றதை இராம அவதாரமும், ஏனைய செய்திகளைக் கண்ணன் அவதாரமும் வெளிப்படுத்தும்.

### அவதாரச் சிறப்புகள்

இறைவன் மண்ணுலகில் தோன்றுவது அவதாரமாகும். திருமாலின் பத்து அவதாரங்களுள் சிலம்பில் கூர்மம், வாமனம், இராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகிய ஐந்து அவதாரங்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

### கூர்ம அவதாரம்

கூர்மம் என்பது ஆமை. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் கடைந்தபோது, 'வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக் கடல்வண்ணன் பண்டொரு நாள் கடல்வயிறு கலக்கினான்' (17.32). இதனைக் 'கடல் வயிறு கலக்கிய ஞாட்பு' (26:37) என்றும், 'பாம்பு கயிறாகக் கடல்கடைந்த மாயவன்' (17.20.1) என்றும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இங்கு மத்துமலை கடலுள் ஆழ்ந்து விடாமல் ஆமையாகித் திருமால் தாங்கிய செய்தி பெறப்படுகிறது.

நல்லவர்களைக் காப்பதும், தீயவர்களை ஒடுக்குவதும் உலக நன்மையைக் கருதியேயாகும் என்ற தன்மையில் திருமாலின் கூர்ம அவதாரம் இடம்பெற்றுள்ளது.

**வாமன அவதாரம்**

வாமனன் என்பது சிறிய உருவம். திருமால் வாமன வடிவுடன் மாவலியிடம் மண் வேண்டிப் பெற்றதும், நீண்டு வளர்ந்து மாவலியின் தலையில் ஒரு காலும், நிலத்தில் ஒருகாலும் ஊன்றி மூன்றாமடிக்கு இடம் வினவியதும் வாமன அவதாரச் செய்தியாகும். இச்செய்தியை, 'நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்' **(11:148)** என்ற மாடல மறையோனின் கூற்றால் தெளிவுபடுத்துவார் இளங்கோவடிகள். 'மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பாவகை முடியத்தாவிய சேவடி' **(17:35)** என்னும் தொடரும் இதனைப் புலப்படுத்தும். சங்க இலக்கியங்களில் உவமையாகப் பயிலப்பட்ட வாமன அவதாரம் சிலப்பதிகாரத்தில் திரிவிக்கிரமனாய் உலகளந்த திருவடிச் சிறப்பாக உரைக்கப்பட்டது.

**இராம அவதாரம்**

திருமாலின் அவதாரங்களில் மிகச்சிறப்பாகக் கருதப்படுவது இராம அவதாரம் ஆகும். உலகுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவன் இராமன். சிலம்பில் இராமனைப் பற்றிய குறிப்புகள் ஐந்து இடங்களில் காணப்படுகின்றன. இராமன் தந்தை சொல்லை ஏற்றுக் கானகம் சென்றமையைத்,

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன் **14: 46–47**

என்றும், கோவலனைப் பிரிந்த புகார் நகரத்தின் துன்பத்தினை இராமன் பிரிந்தமையால் அயோத்தி மாநகரம் துயருற்றதனைய இருந்தது என்றும் மொழிவார். இங்குக் காட்டுவழிப் பயணத்தால் ஏற்படும் கண்ணகிக் கோவலன் துயரினை இராமன் சீதைத் துயருடனும், அவ்விருவரும் புகார் நகரைப் பிரிந்தது இராமனைப் பிரிந்த அயோத்தி நகரம் போல இருந்தது எனவும் மக்களின் வருத்தத்திற்கு இராமவதாரம் சுட்டப்பெற்றுள்ளது .

இராமனின் அவதார மகிமையைக் கவுந்தியடிகள், கோசிகமாணி, ஆய்ச்சியர்கள் வழி இளங்கோ பேச வைக்கிறார். சமணத் துறவியின்வழி இராம அவதாரம் பேசப்படுவது சிறப்பாகும். இடையர் குலத்தில் தோன்றியவன் திருமாலாதலால் அவனின் துன்பத்தை ஆய்ச்சியர்கள் வழியாகத், 'தம்பியொடும் கான்போந்து' **(17.35)** என்றும், 'செங்கமல இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே' **(17.34)** என்றும் இளங்கோ மொழிந்துள்ளார்.

இராம இராவண யுத்தத்தைக், 'கடல் அகழ் இலங்கையில் எழுந்த சமரம்' **(26:237–238)** எனப் பதிவு செய்துள்ளார் இளங்கோ. இராமனின் துயரச் செய்திகளைக் கூறிவந்த இளங்கோ அவனின் வெற்றியினைத், 'தொல்லிலங்கைக் கட்டழித்த சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே' **(17.35)** என்று ஆய்ச்சியர்கள் மொழியால் வெளிப்படுத்துகிறார்.

வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களில் இராமாயணச் செய்திகள் விரவிக்

கிடக்கின்றன. சிலப்பதிகாரம் மக்கள் காப்பியமாதலின் இராம அவதாரம் சிறப்புறப் பேசப்பட்டுள்ளது.

**பலராம அவதாரம்**

பலராமன் ஆதிசேடனின் அவதாரம். இவன் கண்ணனின் அண்ணனாவான். இராம அவதாரத்தில் பலராமன் இலக்குவனாகத் தோன்றி இராமனுக்குத் தொண்டு செய்தவன். பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தில் இரவும்பகலும் கண்துஞ்சாது இராமனைக் காத்தவன். பலராமன் பால்நிறவண்ணன். திருமால் தன்தலையிலுள்ள ஒரு கரியமுடியுடன் ஒரு வெண்முடியையும் எடுத்து நிலத்தில் எறிந்தான். எறியப்பட்ட வெண்முடி பலராமனாகத் தோற்றம் பெற்றது என்றும் புராணங்கள் குறிப்பிடும்.

சிலம்பில் புகாரிலும், மதுரையிலும் பலராமனுக்குக் கோயில் இருந்தது. 'வால்வளை மேனி வாலியோன் கோயில்' (5:171) என்ற தொடரும், 'புகர்வெள்ளை நாகர் தம்கோட்டம்' (9:10) என்ற தொடரும் புகாரிலுள்ள பலதேவன் கோயிலைக் காட்டும். 'மேழிவலன் உயர்ந்த வெள்ளை நகரம்' (14:9) என்பது மதுரையில் அமைந்த பலராமன் கோயிலாகும். பலராமனின் வெண்ணிற மேனியையும், அவனின் படைக்கருவியான கலப்பையையும் இத்தொடர் குறிக்கும். 'மதிபுரையும் நறுமேனித் தம் முன்னோன்' (17.26) என்ற தொடரால் வெண்ணிலா போன்ற பலராமன் கண்ணனுக்கு மூத்தோனாகக் குறிக்கப்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

**கண்ணன் அவதாரம்**

திருமாலின் பத்து அவதாரங்களில் முழுமையானது கண்ணன் அவதாரம். தான் வாழ்ந்த காலத்திலேயே தெய்வமாகப் போற்றப் பெற்றவன் கண்ணன். அவன் தன்னை மானிடப் போர்வையில் மறைத்துக் கொண்டானேயன்றித் தன் தெய்வீக ஆற்றலை இறுதிவரை மறக்கவேயில்லை. கண்ணனின் உருவப்பொலிவும், செயல்பாடுகளும் சிலம்பில் சிறப்பிக்கப்படுகின்றன. 'அஞ்சன வண்ணன்' (6:47), 'தூமணிவண்ணன்' (16.50), 'பூவைப்புது மலர் வண்ணன்' (16.47), 'கடல் வண்ணன்' (26.237) என்ற தொடர்கள் கண்ணனின் நிறத்தைக் குறிப்பன. 'மயில் எருத்து உறழ்மேனி மாயவன்' (17.2) என்பது மயிலின் கழுத்தசையும் போது தென்படும் நிறமாகும். கண்ணனைக் குறிப்பிடும் இத்தொடர் அவனின் அழகையும், இளங்கோவின் ஆழ்ந்த புலமையையும் காட்டுகிறது.

மாதரி தன்மகள் ஐயையிடம் கோவலனையும், கண்ணகியையும் அறிமுகப்படுத்தும்போது, கோவலனைக் கண்ணனோடும், கண்ணகியை நப்பின்னையோடும் ஒப்பிடுகின்றாள் (16:46–53).

**திருவிளையாடல்கள்**

கண்ணனின் திருவிளையாடல்கள் பல. 'களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்' (17.33), 'கடைக்கயிற்றால் கட்டுண்ட கை' (17.32) என்ற தொடர்கள் கண்ணன் வெண்ணெய் உண்டதையும், அதனால் தாயினால் கட்டப்பட்டதையும் சுட்டும். திருப்பாற்கடல் கடைந்த

கைகளைத் தயிர் கடையும் இடையர்குலத் தாய் கயிற்றால் கட்டியதையும், அதனை ஆய்ச்சியர்கள் நகையாடும் செய்தியினையும் சிலம்பு மொழியும். கம்சனின் பல வஞ்சகத் திட்டங்களை அழித்தவன் கண்ணன். இதனைக் 'கஞ்சனார் வஞ்சம் கடந்தானை' (17.37) எனச் சிலம்பு உரைக்கும். கம்சனால் ஏவப்பட்ட அரக்கன் குருந்த மரமாக நின்றதனைக் கண்ட கண்ணன் அவனை அழித்தமையினையும் சிலம்பு மொழியும்.

கண்ணன் சிறுபருவ விளையாட்டாக மகளிர் உடையினை மறைத்தான். யமுனை நதிக்கரையில் நப்பின்னையின் துகிலை ஒளித்து, மேகலையையும் வளையையும் இழக்கச் செய்தான் (17. பா.23–25). கண்ணனின் குழலோசையைக் கேட்ட ஆயமகளிர் துகிலிழந்த வெட்கத்தையும், பொய்க் கோபத்தையும் மறந்து மகிழ்ந்தமையும் பேசப்படுகிறது.

கண்ணன் பாண்டவர்க்காகத் தூது சென்றமை, அருச்சுனனின் தேரோட்டியாகத் திகழ்ந்தமை (17.34), அருச்சுனனைக் காக்கத் தன் ஆழிப்படையால் சூரியனை மறைத்தமை (17.26, 17.30) ஆகியனவற்றைச் சிலம்பு குறிப்பிடுகின்றது.

**கூத்துவகை**

கம்சனின் வஞ்சத்தினால் வந்த யானையின் மருப்பை அழித்து கண்ணன் ஆடிய ஆடல் அல்லியத் தொகுதி ஆகும். வாணனாகிய அரக்கனைக் கொல்ல கண்ணன் ஆடியது மல்லாடல் (6:46–49). காமன் மகன் அநிருத்தனைக் காக்கக், கண்ணன் 'சோ' என்னும் நகரில் குடத்தைத் தலையில் வைத்தாடியது குடக்கூத்து (6:54–55). இம்மூவகை ஆடலும் திருமால் ஆடியனவாகும். மாதவி இந்திர விழாவில் திருமாலின் இக்கூத்து வகைகளை ஆடிச் சிறந்தாள்.

**கோயில்கள்**

திருமாலுக்குக் கோயில்கள் இருந்த செய்தி சிலம்பில் காணப்படுகிறது. 'நீலமேனி நெடியோன் கோட்டம்' (5:172), 'மணிவண்ணன் கோட்டம்' (10:10), 'உவணச் சேவல் உயர்ந்தோன் நியமம்' (14:8), 'ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்' (26:62) என்பதில் கோட்டம், நியமம், ஆடகமாடம் என்பன திருமால் உறையும் தலங்களாகும். ஆடகமாடம் என்பது திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலைக் குறிப்பதாகும்[4]. 'ஆடகமாடத்து அரவணைக் கிடந்தோன்' (30:51) எனும் குறிப்பு இக்கோயிலின் தன்மையை விளம்பும்.

புகாரிலும், மதுரையிலும் திருமாலுக்குத் தனிக்கோயில்கள் இருந்துள்ளன. புகாரில், 'நீலமேனி நெடியோன் கோயிலும்' (5:172), 'மணிவண்ணன் கோட்டமும்' (10:10) இருந்தன. புனிதப் பயணம் முடித்துப் புகாருக்குத் திரும்பிய மாங்காட்டு மறையோன் கோவலனிடம் திருவரங்கம், திருப்பதித் தலங்களின் சிறப்பினை மொழிந்தான். நீலமேகம் நெடும்பொற் குன்றமாகிய திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தையும், வேங்கடமெனும் ஓங்குயர் மலையத்து உச்சியில் திருமாலின் நின்ற கோலத்தையும் இளங்கோ சுட்டியுள்ளார்.

மதுரைக் கோயில் 'உவணச் சேவல் உயர்ந்தோன் நியமம்' (14:8) என்று குறிப்பிடப்படுகிறது. 'நீடுநீர் வையை நெடுமால்' (18:4) என்ற திருமால் கோயிலுக்கு மாதரி,

கண்ணகியின் துயர் துடைக்க வேண்டிச் சென்றமை குறிக்கப்பட்டுள்ளது. மதுரையின் அருகிலுள்ள அழகர் கோயில்[5] 'திருமால் குன்றம்' (11:91) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

ஆடு மேய்ப்பவர் புல்லினத்தார் எனும் தொடரால் குறிக்கப்பெற்றனர். பருவமெய்திய ஒவ்வொரு ஆயர்மகளும் திருமணத்திற்காகக் காளை வளர்த்தலைக் கடமையாகக் கொண்டிருந்தனர். துயர் நீக்குவதற்கு ஆய்ச்சியர் குரவைக் கூத்து ஆடியுள்ளனர்.இன்பத்திலும், துன்பத்திலும் பாடி ஆடி வணங்கும் ஆயர் முறைமை நாயன்மார் ஆழ்வார்களின் பக்திப் பாசுரங்களின் தோற்றத்திற்கு வழிகாலாகியுள்ளது. ஆயர்குடியில் பொருளாதாரப் பொறுப்பு பெண்டிரிடமே இருந்தது. முல்லை நில மக்கள் அறிவாலும், ஆற்றலாலும், முயற்சியாலும், நாகரிகத்தாலும் பிற நில மக்களிடமிருந்து வேறுபட்டுள்ளனர்.

**சான்றாதாரங்கள்**


- தொல்காப்பியம் 951.
- கலித்தொகை, முல்லைக்கலி, 3:55
- நற்றிணை.32:1.
- சிலப்பதிகாரம், அடியார்க்குநல்லார் உரை, ப.532.
- ஞா.மாணிக்கவாசகன், சிலப்பதிகாரம் (உ- ஆ) ப.191.